ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2352/05 - 2023 ඔක්තෝබර් මස 03 වැනි අඟහරුවාදා - 2023.10.03

2352/05 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/UDB/4/1//2/8.

ம/தெல்தெனிய/மெதிவக வித்தியாலத்திற்கு தேவைக்காக பின்வரும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் உடதும்பர பிரதேச செயலகப் பிரிவில் மெதிவக கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள தனஹம்பிடியே வயல், தனஹம்பிடியே ஹேன என்ற பெயருடைய காணியின் நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட கடஸ்திரல் வரைபட இல. 321339 இன் தொகுதி இல. 01 தாள் இல. 01 இன் துண்டு இல. 01 இல் காட்டப்பட்டுள்ள 0.1745 ஹெக்டயார் விஸ்தீரண முடைய காணித் துண்டின் விபரங்கள்:

உரிமை கோருபவர்: திரு. இசுப் இஸ்மயில் அப்துல் இரசாக், 2 A, மெதிவக, உடதும்பர.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு உடதும்பர பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிலுஷா மனோரத்ன,
பிரதேச செயலாளர்,
உடதும்பர.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
உடதும்பர,
2023, செத்தெம்பர் 25.

EOG 10 - 0002

1A - G 40418 — 19 (2023/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*